ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1774/29 - 2012 සැප්තැම්බර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.09.06

*1774/29 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வில்கமுவ பிரதேச சபை

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின் ஏ பந்தியின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய வில்கமுவ பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணை விதிகள் வில்கமுவ பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 1988.08.23 ஆந் திகதி 520/7 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின் 06 ஆவது இலக்கம் கொண்ட வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள், மேற்குறித்த துணைவிதிகள் செயற்படும் நாளிலிருந்து இந்த அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் வில்கமுவ பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படமாட்டாது எனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*
*மத்திய மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண மாகாண சபை,*
*கண்டி,*
*2012, யூலை 06.*

வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்

**வில்கமுவ பிரதேச சபை**

*1. இந்தத் துணை விதிகள் வில்கமுவ பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது, கட்டுப்படுத்துவது, நெறிப்படுத்துவது, கட்டணங்களை அறவிடுவது தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. பிரதேச சபையின் மூலம் அனுமதிக்கப்பட்டு, தலைவரினால் அறிவிக்கப்பட்டு இங்கு முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள இடங்கள் தவிர, வேறு எந்த இடங்களிலும் வாடகைக்காக ஓடும் நோக்கத்துடன் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இடங்களை மாற்றியமைக்கவோ, புதிய இடங்களைப் பெயரிடவோ முடியும்.*

3. வில்கமுவ பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தி வைப்பது தொடர்பான துணைவிதிகளுக்கமைய முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிறுத்தி வைப்பதற்கான கட்டணத்தையும், அதற்குரிய அரசாங்கக் கட்டணத்தையும் சபையிடம் மாதாந்தம் செலுத்துவதன் மூலம் வாகனம் நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும். குறித்த வாடகை வாகனங்கள் சபையிடம் பதிவு செய்யப்படுதல் வேண்டும். உரிய கட்டணம் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும். திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் செயலுக்கு வரும்.

4. பிரதேச சபையின் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரேனும் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள, இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. இந்த நடைமுறை முற்பகல் 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை செயற்படுத்தப்படும்.

5. இந்தத் துணை விதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அதன் செல்லுபடிக் காலம் அது வழங்கப்பட்ட உரிய மாதத்தின் கடைசித் திகதியுடன் முடிவடையும்.

6. அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக வில்கமுவ பிரதேச சபை விநியோகிக்கும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான விண்ணப்பப் படிவத்தை உரிமையாளர் அல்லது சாரதி சபையின் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.

7. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு வாகனம் தொடர்பான அனுமதிப் பத்திரத்தைக் காட்டும் வண்ணம் உரிமையாளரிடமோ அல்லது சாரதியிடமோ வாகனக் கட்டுப்பாட்டாளர் அல்லது குறித்த கருமத்துக்கெனத் தலைவரால் அதிகாரம் வழங்கப் பட்ட அலுவலர் வேண்டிக் கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரிசீலிப்பதற்காக அவர் முன்வைத்தல் வேண்டும்.

8. மாதத்தின் முதலாம் திகதிக்கு முன்னர் உரிய மாதத்துக்கான வாகனம் நிறுத்தி வைப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

9. வில்கமுவ பிரதேச சபையின் மூலம் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி எந்தவொரு வாகனத்தையும் வாடகை வாகனத் தரிப்பிடத்தில் நுழைத்தல் கூடாது.

10. நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வாகனத் தரிப்பிடமொன்றில் இருந்து வாகனத்தை 14 நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு அகற்றிக்கொள்ள நேர்ந்தால் அது பற்றி சபை அலுவலகத்தில் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல் ஏதும் செயற்படாதவிடத்து, உரிய மாதத்துக்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

11. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் எந்தவொரு வாகனத்தையும் திருத்தம் செய்வதோ, கழுவுவதோ அல்லது கழுவச் செய்வதோ கூடாது.

12. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் அல்லது வாகனம் ஒன்றினுள் எவரேனும் குடிபோதையிலோ, தகாத முறையிலோ அல்லது ஏனையோருக்கு இடையூறு ஏற்படும் விதத்திலோ நடந்து கொள்வது கூடாது.

13. இந்தத் துணை விதிகளின் எந்தவொரு ஏற்பாட்டையும் மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதிகாரம் கொண்ட நீதிமன்றம் இதனைக் குற்றமாகக் கருதி விதிக்கும் உச்ச அளவுத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும். மேலும் இந்த மீறல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால், அல்லது இது பற்றிய கவனத்தை ஈர்த்துத் தலைவரது அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரது எழுத்துமூல அறிவித்தலைப் பெற்ற பின்னரும் மீறப்பட்டால் அவ்வாறு மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் மேலதிகத் தண்டத்துக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் 2 ஆவது உப பிரிவின்படி உட்படுதல் வேண்டும்.

14. உரிய அதிகாரங்களைக் கொண்டுள்ள நீதிமன்றம் விதிக்கும் வேறு ஏதும் தண்டத்துக்கு மேலதிகமாக இந்தத் துணை விதிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் மீறிய குற்றத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரது பதிவு இரத்துச் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும். மேலும், அவ்வாறு இரத்துச் செய்வது தொடர்பாக எந்தவித நட்டஈட்டையும் பெற அவருக்கு உரித்து இல்லை.

15. பதங்கள் பற்றிய தெளிவு தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில் "சபை" என்பது வில்கமுவ பிரதேச சபையையும்,

"தலைவர்" என்பது வில்கமுவ பிரதேச சபையின் தலைவரையும்,

"அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பது வில்கமுவ பிரதேச சபையின் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும்,

"வாகனக் கட்டுப்பாட்டாளர்" என்பது வில்கமுவ பிரதேச சபை நியமித்துள்ள வாகனங்களைக் கட்டுப்படுத்தும் அலுவலரையும்,

"மோட்டார் வாகனம் அல்லது வாடகை வாகனம்" என்பது முச்சக்கர வண்டியையோ, லொறி வண்டியையோ, ட்ராக் வண்டியையோ, மோட்டார் வானையோ, திராக்டரையோ, மோட்டார் காரையோ, இரண்டு சக்கர திராக்டரையோ குறிக்கும்.

இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

## அட்டவணை 01

1. ஹீன்கங்கை பாலம் அருகிலிருந்து பாதையின் வலதுபுறம் ஹெட்டிபொல நோக்கிய 40 அடி வரையிலான பகுதி.
2. நுககொல்ல தியவர கம்மான சந்தியிலிருந்து ஹசலக்க நோக்கிய பிரதான பாதையில் இடதுபுறம் 75 அடி நீளமான பிரதேசம்.
3. வில்கமுவ நிபொன் சந்தியிலிருந்து பாதையின் வலதுபுறம் நிபொன் பாலத்தை நோக்கிய 100 அடி நீளமான பிரதேசம்.
4. ஹெட்டிபொல நகரின் பஸ் தரிப்பிடத்தின் எதிரில் 50 அடிப் பிரதேசம்.
5. ஹெட்டிபொல நகரின் பஸ் தரிப்பிடத்தின் பின்புறம் போதிய அருகில் 40 அடிப் பிரதேசம்.
6. தேவகிரி சந்தியிலிருந்து பாதையின் இடதுபுறம் ஹந்துன்கமுவ நோக்கிய 50 அடி நீளமான பிரதேசம்.
7. ஹந்துன்கமுவ 3 வாய்க்கால் சந்தியிலிருந்து ஹெட்டிபொல நோக்கிய பாதையின் வலதுபுறம் 80 அடிப் பிரதேசம்.
8. மாரக்க ஆஸ்பத்திரிச் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி நோக்கிய பாதையின் இடதுபுறம் 75 அடிப் பிரதேசம்.
9. குருவெலயாய மயானத்தின் அருகிலிருந்து பாதையின் வலதுபுறம் ஹெட்டிபொல நோக்கிய 100 அடிப் பிரதேசம்.

## அட்டவணை - 02

| | | (மாதாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம்) ரூபா | ச. |
|---|---|---|---|
| 1. | லொறி | 50 | 00 |
| 2. | மோட்டார் வான் | 50 | 00 |
| 3. | பஸ் வண்டி | 50 | 00 |
| 4. | முச்சக்கர வண்டி | 50 | 00 |
| 5. | மோட்டார் வாகனம் | 50 | 00 |
| 6. | ஏனைய வாகனங்கள் | 50 | 00 |

## அட்டவணை 03

வில்கமுவ பிரதேச சபை

வாடகை வாகனம் நிறுத்தி வைப்பதற்குரிய அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பப்படிவம்

01. வாகனத்தின் இலக்கமும் வகையும்:
02. உரிமையாளரது பெயர்:----.
03. ஆளடையாள அட்டை இலக்கம்:----.
04. உரிமையாளர் முகவரி:----.
05. சாரதியின் ஆளடையாள அட்டை இலக்கம்:----.
06. சாரதியின் அனுமதிப்பத்திர இலக்கம்:----.
07. சாரதியின் முகவரி:----.
08. வாகனத்தை நிறுத்த உத்தேசித்துள்ள தரிப்பிடம்:----.
09. வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கம்:----.
10. அதன் கொள்ளளவும் நிறையும்:----.
11. அனுமதிப்பத்திரக் கட்டணம் : ................. ரூபா

மேற்காட்டிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

...................,
வாகன உரிமையாளரது/சாரதியின் கையொப்பம்.

திகதி :........................................

தலைவரது பரிந்துரை,

மேற்குறிப்பிட்ட விபரங்களுக்கமைய அனுமதிப்பத்திரத்தை வழங்க அங்கீகாரம் வழங்குகின்றேன்/வழங்கவில்லை.

...................,
தலைவர்,
வில்கமுவ பிரதேச சபை

திகதி: -----------.

9-613/1

**மாநகர நிர்வாக எல்லைக்குள் நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பது தொடர்பான துணை விதிகள்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரால் தயாரிக்கப்பட்ட பின்வரும் வரைவுச் சட்டத் துணைவிதிகள் மேற்குறித்த பிரிவுகளின்கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*மேற்குறித்த வரைவுச்சட்ட துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கொண்டமைந்த துணைவிதிகளை வரைவு செய்ய மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 157 ஆவது பிரிவின் மூலம் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ள மாநகர சபைகளுக்கு, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய மேற்குறித்த 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின் 3 ஆவது உபபிரிவின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த சட்டமூலத்துக்கு இயைவாகத் துணைவிதிகள் தழுவப்பட இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண சபை,*
*கண்டி,*
*2012.06.18.*

**மாநகர நிர்வாக எல்லைக்குள் நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பது தொடர்பான துணை விதிகள்**

*1. இந்தத் துணை விதிகள் மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் நுளம்புகளும், நோய் காவும் கிருமிகளும் பரவுவதைத் தடுப்பதன் மூலம் மற்றும் அழிப்பதன் மூலம் நிர்வாகப் பிரதேசத்தின் சுற்றாடல் நிலைமையை விருத்தி செய்வது மற்றும் தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதற்குமான துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. மாநகரசபைப் பிரதேசத்துக்குள் எவரேனும் ஒருவர் எந்தவொரு வளவிலும் நுளம்புகள் அல்லது நோய் காவும் கிருமிகள் பெருகுவதற்கும் விருத்தியாவதற்கும் ஏதுவான வகையில் செயற்படுவது அல்லது செயற்படுத்துவது அல்லது அவ்வாறு நிகழ்வதற்கு இடமளிப்பது கூடாது.*

*3. நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பதற்காக மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள ஒவ்வொரு வளவினதும் குடியிருப்பாளர்கள்,*

I. *மூடப்படாத அனைத்து ரின்கள், போத்தல்கள், பெட்டிகள், பிளாத்திக் கொள்கலன்கள், டயர்கள், தென்னஞ் சிரட்டைகள், தென்னங் கோதுகள் மற்றும் அவ்விடத்திலுள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள், பாத்திரங்கள் போன்றவற்றை அகற்றச்செய்ய அல்லது அழித்துவிட ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

II. *குடியிருக்கும் அல்லது குடியிருக்காத கட்டடங்களின் மழைநீர்ப் பீலிகள், கூரைத் தண்ணீர் தரைக்கு வருவதற்காக உள்ள நீர்க்குழாய்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் அமைந்துள்ள வடிகான்களில் நீர் முறையாக வடிந்தோடக்கூடிய வகையில் அவற்றைப் பராமரித்து வருதல் வேண்டும். அவற்றில் ஏற்படும் தடைகள் நிதமும் பரிசீலிக்கப்பட்டு அகற்றப்படுதல் வேண்டும்.*

III. *குடியிருக்கும் அல்லது குடியிருக்காத வளவுகளுக்குள் காணப்படும் அனைத்து நீர்ப் பாத்திரங்கள், தாங்கிகள் மற்றும் நீர் தேங்கி நிற்கும் ஏனைய பாத்திரங்கள் என்பவற்றை நல்ல நிலையில், காலத்துக்கேற்ற வண்ணம் மறுசீரமைத்தும் பராமரித்தல் வேண்டும். அவற்றை நுளம்புகளிலிருந்தும், கிருமிகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் வண்ணம் மூடியோ அல்லது மறைத்தோ வைப்பதுடன் அவற்றில் நுளம்புகளும் கிருமிகளும் பரவுவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.*

IV. வளவுக்குள் அமைந்துள்ள அனைத்துக் கிணறுகளையும் நல்ல நிலையில் வைத்திருப்பதுடன் நுளம்பு மற்றும் நோய் காவும் கிருமிகள் பெருகுவதைத் தடுக்கும் வகையிலும் வைத்திருக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

V. வெறுமையாக்க இயலுமான வகையில் அமைக்கப்பட்டுள்ள செயற்கைத் தடாகங்கள் இருப்பின், அவை குறைந்தது வாரத்தில் ஒரு தடவையேனும் வெறுமையாக்கப்பட்டுத் தூய்மையாக்கப்படுதல் வேண்டும்.

VI. வீட்டுத் தோட்டங்களிலும் காணிகளிலும் உள்ள வடிகான்களில் வடிந்தோடும் நீர் சேருவதனால் ஏற்படும் நீர்க் குழிகள் அமைவதைத் தவிர்க்கும் வகையில் அவற்றைக் கிரமமாகப் பராமரித்து வருதல் வேண்டும்.

VII. மனித வசிப்பிடமாகப் பயன்படுத்தப்படும் ஏதும் கட்டடங்கள் அல்லது நிர்மாணங்கள் அமைந்துள்ள 5 மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் உணவுக்காக அல்லது அழகுக்காக வளர்க்கப்படும் தாவரங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பற்றைக் காடுகளும், பயிர்ச்செய்கைகளும், தாவரங்களும் அப்பகுதியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

VIII. அனைத்து கற்குழிகளும், இரத்தினக்கல் அகழ்ந்த குழிகளும் அல்லது வேறேதும் காரணங்களுக்கென தோண்டப்பட்ட குழிகளும் நீர் சேருவதைத் தடுக்கும் வகையில் பேணப்படுதல் வேண்டும்.

IX. மேட்டுத் தரைகளில் வளரும் நீர் தேங்கி நிற்கக்கூடிய வண்ணத் தாவரங்கள், பாசி, எண்ணெய்ப் பாசி மற்றும் பாசி வகைகள் உள்ளிட்ட நீர்த் தாவரங்கள் மற்றும் நுளம்புகள், கிருமிகள் பெருகுவதற்கு இடமளிக்கும் எனக் காலத்துக்குக் காலம் தெரியவரும் ஏனைய தாவரம் அல்லது தாவரங்கள் என்பவற்றை அகற்றி அழித்து விடுதல் வேண்டும். குறித்த தாவரங்கள் ஏதும் நீர்ப் பாதைகளினூடே மிதந்து செல்வதைத் தடுக்கும் வண்ணம் பொருத்தமான தடைகளை அமைத்து, அவை பரவிச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

X. மலசலகூடங்கள், நீர்க்குழிகள், உறிஞ்செடுக்கும் குழிகள், முத்திரையிடப்பட்ட குழிகள் மற்றும் அவற்றின் சுற்றாடல் உள்ளிட்ட குறித்த இடத்திலுள்ள அனைத்து மலகூடங்களையும் நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கும் நிலையில் நடத்திச் செல்லுதல் வேண்டும்.

XI. மயானங்கள் அல்லது ஏனைய வளவுகளில் அமைக்கப்படும் இறந்தோருக்கான நினைவுச் சின்னங்கள் நீர் தேங்கி நிற்காத வகையில் நிர்மாணிக்கப்படுதல் வேண்டும்.

4. மாநகரசபையின் தலைவர் அல்லது குறித்த கருமத்தை நிறைவேற்றவென எழுத்து மூலம் அனுமதி வழங்கப்பட்ட அலுவலர் எந்தவொரு நாளிலும் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணிவரையுள்ள காலத்துக்குள் எந்தவொரு இடத்திலும் உட்பிரவேசித்துப் பின்வரும் அம்சங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகக் குறித்த இடத்தைப் பரிசோதனை செய்வது சட்டபூர்வமானதாக அமையும்.

I. குறித்த இடம் நுளம்புகளும் கிருமிகளும் பரவும் இடமா என்பது,
II. குறித்த இடத்தின் குடியிருப்பாளர், துணை விதிகளில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிடித்துள்ளாரா என்பது.
III. குறித்த இடத்தில் நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதற்கும்,அழிப்பதற்குமென நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டி இருப்பின், அவை என்ன என்பது
IV. குறித்த இடத்தில் கிருமிநாசினி விசிறும் கருமம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது

05. (1) மாநகரசபையின் மாநகர ஆணையாளரினால் அல்லது அவரது எழுத்துமூல அனுமதியுடன் கருமங்களுக்கென விசேடமாக அதிகாரம் வழங்கப்பட்ட எந்த அலுவலரும் குறித்த இடமொன்றைப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கருதி, மேற்கொண்ட பரிசோதனைகளின் பின்னர் குறித்த இடத்தில் நுளம்புகள் அல்லது நோய் காவும் கிருமிகளை அழிக்கவோ, கட்டுப்படுத்தவோ மேற்கொள்ளவேண்டிய கருமங்களைக் குறித்துரைக்கும் காலத்துக்குள் செய்து முடிக்க வேண்டுமென அந்த இடத்தின் உரிமையாளருக்கோ அல்லது குடியிருப்பாளருக்கோ எழுத்து மூலம் அறிவித்தல் விடுக்க முடியும்.

(II) இந்தத் துணை விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் அறிவித்தல் விடுக்கப்பட்ட ஏதும் ஒரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், குறித்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்துக்குள் அந்த நியமங்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

06. (I) மாநகர ஆணையாளரது எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு இடத்தினதும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அங்கு கிணறு தோண்டுவதோ அல்லது நீர்த்தாங்கி, தடாகம், நீர்ப் பாத்திரம், நீர்ப்பூ அல்லது நீரைத் தேக்கி வைக்கும் ஏதுமொரு தாங்கியை அமைக்கவோ கூடாது.

(II) இந்தத் துணை விதியின் (1) ஆவது பந்தியின் ஏற்பாடுகளை மீறும் வகையில் ஏதும் நிருமாணங்களைச் செய்யும் சந்தர்ப்பத்தில், மாநகர ஆணையாளரினால் குறித்த இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடம் கையளிக்கப்பட்ட எழுத்துமூல அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் கிணறு, தாங்கி, தடாகம், நீர்ப் பாத்திரம், நீர்ப்பூ அல்லது பாத்திரத்தின் மேற்பரப்பின்மீது விதிக்கப்படும் பொருட்களை நிரப்பி அதனை மூடிவிடவோ அல்லது வேறேதும் வகையில் அழித்து விடவோ அல்லது குறித்த காலத்துக்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றியமைக்கவோ விதிக்க முடியும்.

07. (I) 05 ஆவது அல்லது 06 ஆவது துணை விதியின் கீழ் அறிவித்தலொன்றைக் குறித்த இடத்தின் உரிமையாளரிடம் அல்லது குடியிருப்பாளரிடம் நேரடியாகவோ அல்லது அந்த அறிவித்தலைக் குறித்த இடத்தில் நன்கு தெரியும் வண்ணம் ஒட்டவைத்தோ வழங்க முடியும்.

(II) ஏதேனும் ஒரு இடத்தில் கூட்டு உரிமையாளர் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் வசிக்குமிடம் தொடர்பில், குறித்த உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் 07(1) ஆவது துணை விதி மற்றும் 05 ஆவது துணைவிதியின் கீழ் அவர்களில் ஒருவரிடம் கையளிக்கப்படும் அறிவித்தலின் நியமங்களை வேண்டுமென்றே நிறைவேற்றாது விட்டுவிடுவாரெனில், அவர்கள் பொதுவாகவும் தனித்தனியாகவும் அதற்கு வகை சொல்லுதல் வேண்டும்.

(III) 05 ஆவது அல்லது 06 ஆவது துணை விதியின் கீழ் அறிவித்தல் கையளிக்கப்பட்ட ஓரிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், குறித்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அவற்றின் நியமங்களை நிறைவேற்றாது இருக்கும் சந்தர்ப்பங்களில், மாநகர ஆணையாளர் அல்லது அறிவித்தல் விடுக்க அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் அல்லது குறித்த கருமத்தை நிறைவேற்ற அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரால் எந்தவொரு நாளிலும் முற்பகல் 6.00 மணியிலிருந்து பிற்பகல் 6.00 மணிவரையுள்ள நேரத்தில் தேவையெனக் கருதும் உதவியாளருடனும் பணியாட்களுடனும் குறித்த இடத்துக்குள் நுழைந்து, அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள நியமங்களையோ அல்லது செயற்பாடுகளையோ நிறைவேற்ற அல்லது நிறைவேற்றச் செய்ய முடியும்.

(IV) ஏதேனும் ஒரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிப்பாளர் 05 ஆவது, 06 ஆவது மற்றும் 07 ஆவது துணை விதிகளின் கீழ் கையளிக்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதும் கருமங்கள் அல்லது செயற்பாடுகள் மாநகர ஆணையாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கிய அலுவலரால் அவை நிறைவேற்றப்பட முடியும். அவ்வாறு நிறைவேற்றப்படும் பட்சத்தில், குறித்த கருமங்களை அல்லது செயற்பாடுகளை நிறைவேற்ற மேற்கொண்ட செலவுகளைக் குறித்த இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் மாநகரசபையிடம் செலுத்துதல் வேண்டும். மாநகரசபைத் தலைவர் தனது கையொப்பத் துடனான அறிவித்தலை விடுத்த 14 நாட்களுக்குள் குறித்த தொகைப் பணத்தை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செலுத்தத் தவறும் பட்சத்தில், அது மாநகர சபைக்குக் கிடைக்கவேண்டிய தண்டப்பணம் எனக் கருதி, அதனை உரிமையாளரிடமிருந்து அல்லது குடியிருப்பாளரிடமிருந்து அறவிட்டுக் கொள்வது சட்டபூர்வமானதாக அமையும்.

08. இந்தத் துணை விதிகளில் ஏதேனும் ஒன்றை மீறுவது குற்றச் செயலாகக் கருதப்படும். எவரேனும் ஒருவர் இதற்கென நீதிமன் றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் எழுநூற்றி ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும். மீறும் செயல் தொடர்ந்தும் செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருநூற்றி ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

09. சொற்பிரயோகம் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில்

"உரிமையாளர்" என்பது ஏதும் உரிமையாளர் மற்றும் குத்தகையாளர் அல்லது ஏதும் இடமொன்றில் வாடகைக்கு இருப்பவர் அல்லது அறுவடையை எந்த வகையிலும் உரிமை பாராட்டுபவரையும்,

"குடியிருப்பாளர்" என்பது ஏதும் ஒரு இடத்தில் குடியிருப்பவர் அல்லது இன்னுமொருவருக்காகப் பிரதிநிதியாகச் செயற்படுபவர் அல்லது அதன் பொறுப்பையோ முகாமையையோ அல்லது நிருவாகத்தையோ மேற்கொள்பவரையும்,

"அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பது மாநகரசபைத் தலைவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் அல்லது ஊழியரையும்,

"சபை" என்பது மாநகர சபையையும்,

"மாநகர ஆணையாளர்" என்பது உரிய மாநகரசபையின்மாநகர ஆணையாளரையும்,

"நோய் காவும் கிருமிகள்" என்பது நுளம்புகள் மற்றும் நோய்களைப் பரப்பும் ஏனைய கிருமிகளையும்,

"இடம்" என்பது ஒரு காணி, வீடு, கடை அல்லது நிர்மாணம் என்பதுடன், பயன்படுத்தப்படும் அல்லது கைவிடப்பட்ட கிணறு, கப்பல், கொள்கலன் அல்லது கைவிடப்பட்ட வாகனம் என்பவற்றையும், தடாகம், தாங்கி, குளத்துக்கான தண்ணீர் வழி, வடிகான் அல்லது ஆற்றங்கரை என்பவற்றையும் குறிக்கும்.

**நகரசபை நிர்வாக எல்லைக்குள் நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பது தொடர்பான துணை விதிகள்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரால் தயாரிக்கப்பட்ட பின்வரும் வரைவுச் சட்டத் துணைவிதிகள் மேற்குறித்த பிரிவுகளின்கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*மேற்குறித்த வரைவுச்சட்ட துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கொண்டமைந்த துணைவிதிகளை வரைவு செய்ய நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 157 ஆவது பிரிவின் மூலம் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ள நகர சபைகளுக்கு 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய மேற்குறித்த 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின் 3 ஆவது உபபிரிவின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த சட்டமூலத்துக்கு இயைவாகத் துணைவிதிகள் தழுவப்பட இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண சபை,*
*கண்டி,*
*2012.06.18.*

**நகர சபை நிர்வாக எல்லைக்குள் நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பது தொடர்பான துணை விதிகள்**

*1. இந்தத் துணை விதிகள் மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் நுளம்புகளும், நோய் காவும் கிருமிகளும் பரவுவதைத் தடுப்பதன் மூலம் மற்றும் அழிப்பதன் மூலம் நிர்வாகப் பிரதேசத்தின் சுற்றாடல் நிலைமையை விருத்தி செய்வது மற்றும் தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதற்குமான துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. நகரசபைப் பிரதேசத்துக்குள் எவரேனும் ஒருவர் எந்தவொரு வளவிலும் நுளம்புகள் அல்லது நோய் காவும் கிருமிகள் பெருகுவதற்கும் விருத்தியாவதற்கும் ஏதுவான வகையில் செயற்படுவது அல்லது செயற்படுத்துவது அல்லது அவ்வாறு நிகழ்வதற்கு இடமளிப்பது கூடாது.*

*3. நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பதற்காக மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள ஒவ்வொரு வளவினதும் குடியிருப்பாளர்கள்*

I. *மூடப்படாத அனைத்து ரின்கள், போத்தல்கள், பெட்டிகள், பிளாத்திக் கொள்கலன்கள், டயர்கள், தென்னஞ் சிரட்டைகள், தென்னங் கோதுகள் மற்றும் அவ்விடத்திலுள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள், பாத்திரங்கள் போன்றவற்றை அகற்றச்செய்ய அல்லது அழித்துவிட ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

II. *குடியிருக்கும் அல்லது குடியிருக்காத கட்டடங்களின் மழைநீர்ப் பீளிகள், கூரைத் தண்ணீர் தரைக்கு வருவதற்காக உள்ள நீர்க்குழாய்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் அமைந்துள்ள வடிகான்களில் நீர் முறையாக வடிந்தோடக்கூடிய வகையில் அவற்றைப் பராமரித்து வருதல் வேண்டும். அவற்றில் ஏற்படும் அடைப்புக்கள் நிதமும் பரிசீலிக்கப்பட்டு அகற்றப்படுதல் வேண்டும்.*

III. *குடியிருக்கும் அல்லது குடியிருக்காத வளவுகளுக்குள் காணப்படும் அனைத்து நீர்ப் பாத்திரங்கள், தாங்கிகள் மற்றும் நீர் தேங்கி நிற்கும் ஏனைய பாத்திரங்கள் என்பவற்றை நல்ல நிலையில், காலத்துக்கேற்ற வண்ணம் மறுசீரமைத்தும் பராமரித்தல் வேண்டும். அவற்றை நுளம்புகளிலிருந்தும், கிருமிகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் வண்ணம் மூடியோ அல்லது மறைத்தோ வைப்பதுடன் அவற்றில் நுளம்புகளும் கிருமிகளும் பரவுவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.*

IV. *வளவுக்குள் அமைந்துள்ள அனைத்துக் கிணறுகளையும் நல்ல நிலையில் வைத்திருப்பதுடன் நுளம்பு மற்றும் நோய் காவும் கிருமிகள் பெருகுவதைத் தடுக்கும் வகையிலும் வைத்திருக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.*

V. வெறுமையாக்க இயலுமான வகையில் அமைக்கப்பட்டுள்ள செயற்கைத் தடாகங்கள் இருப்பின், அவை குறைந்தது வாரத்தில் ஒரு தடவையேனும் வெறுமையாக்கப்பட்டுத் தூய்மையாக்கப்படுதல் வேண்டும்.

VI. வீட்டுத் தோட்டங்களிலும் காணிகளிலும் உள்ள வடிகான்களில் வடிந்தோடும் நீர் சேருவதனால் ஏற்படும் நீர்க் குழிகள் அமைவதைத் தவிர்க்கும் வகையில் அவற்றைக் கிரமமாகப் பராமரித்து வருதல் வேண்டும்.

VII. மனித வசிப்பிடமாகப் பயன்படுத்தப்படும் ஏதும் கட்டடங்கள் அல்லது நிர்மாணங்கள் அமைந்துள்ள 5 மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் உணவுக்காக அல்லது அழகுக்காக வளர்க்கப்படும் தாவரங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பற்றைக் காடுகளும், பயிர்ச்செய்கைகளும், தாவரங்களும் அப்பகுதியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

VIII. அனைத்து கற்குழிகளும், இரத்தினக்கல் அகழ்ந்த குழிகளும் அல்லது வேறேதும் காரணங்களுக்கென தோண்டப்பட்ட குழிகளும் நீர் சேருவதைத் தடுக்கும் வகையில் பேணப்படுதல் வேண்டும்.

IX. மேட்டுத் தரைகளில் வளரும் நீர் தேங்கி நிற்கக்கூடிய வண்ணத் தாவரங்கள், பாசி, எண்ணெய்ப் பாசி மற்றும் பாசி வகைகள் உள்ளிட்ட நீர்த் தாவரங்கள் மற்றும் நுளம்புகள், கிருமிகள் பெருகுவதற்கு இடமளிக்கும் எனக் காலத்துக்குக் காலம் தெரியவரும் ஏனைய தாவரம் அல்லது தாவரங்கள் என்பவற்றை அகற்றி அழித்து விடுதல் வேண்டும். குறித்த தாவரங்கள் ஏதும் நீர்ப் பாதைகளினூடே மிதந்து செல்வதைத் தடுக்கும் வண்ணம் பொருத்தமான தடைகளை அமைத்து, அவை பரவிச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

X. மலசலகூடங்கள், நீர்க்குழிகள், உறிஞ்செடுக்கும் குழிகள், முத்திரையிடப்பட்ட குழிகள் மற்றும் அவற்றின் சுற்றாடல் உள்ளிட்ட குறித்த இடத்திலுள்ள அனைத்து மலகூடங்களையும் நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கும் நிலையில் நடத்திச் செல்லுதல் வேண்டும்.

XI. மயானங்கள் அல்லது ஏனைய வளவுகளில் அமைக்கப்படும் இறந்தோருக்கான நினைவுச் சின்னங்கள் நீர் தேங்கி நிற்காத வகையில் நிர்மாணிக்கப்படுதல் வேண்டும்.

4. நகரசபையின் தலைவர் அல்லது குறித்த கருமத்தை நிறைவேற்றவென எழுத்து மூலம் அனுமதி வழங்கப்பட்ட அலுவலர் எந்தவொரு நாளிலும் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணிவரையுள்ள காலத்துக்குள் எந்தவொரு இடத்திலும் உட்பிரவேசித்துப் பின்வரும் அம்சங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகக் குறித்த இடத்தைப் பரிசோதனை செய்வது சட்டபூர்வமானதாக அமையும்.

I. குறித்த இடம் நுளம்புகளும் கிருமிகளும் பரவும் இடமா என்பது ;
II. குறித்த இடத்தின் குடியிருப்பாளர், துணை விதிகளில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிடித்துள்ளாரா என்பது;
III. குறித்த இடத்தில் நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதற்கும்,அழிப்பதற்குமென நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டி இருப்பின், அவை என்ன என்பது ;
IV. குறித்த இடத்தில் கிருமிநாசினி விசிறும் கருமம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது.

05. (1) நகரசபைத் தலைவரது அல்லது அவரது எழுத்துமூல அனுமதியுடன் கருமங்களுக்கென விசேடமாக அதிகாரம் வழங்கப்பட்ட எந்த அலுவலரும் குறித்த இடமொன்றைப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கருதி, மேற்கொண்ட பரிசோதனைகளின் பின்னர் குறித்த இடத்தில் நுளம்புகள் அல்லது நோய் காவும் கிருமிகளை அழிக்கவோ, கட்டுப்படுத்தவோ மேற்கொள்ளவேண்டிய கருமங்களைக் குறித்துரைக்கும் காலத்துக்குள் செய்து முடிக்க வேண்டுமென அந்த இடத்தின் உரிமையாளருக்கோ அல்லது குடியிருப்பாளருக்கோ எழுத்து மூலம் அறிவித்தல் விடுக்க முடியும்.

(II) இந்தத் துணை விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் அறிவித்தல் விடுக்கப்பட்ட ஏதும் ஒரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், குறித்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்துக்குள் அந்த நியமங்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

06. (I) நகரசபைத் தலைவரது எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு இடத்தினதும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அங்கு கிணறு தோண்டுவதோ அல்லது நீர்த்தாங்கி, தடாகம், நீர்ப் பாத்திரம், நீர்ப்பூ அல்லது நீரைத் தேக்கி வைக்கும் ஏதுமொரு தாங்கியை அமைக்கவோ கூடாது.

(II) இந்தத் துணை விதியின் (1) ஆவது பந்தியின் ஏற்பாடுகளை மீறும் வகையில் ஏதும் நிருமாணங்களைச் செய்யும் சந்தர்ப்பத்தில், நகரசபைத் தலைவரால் குறித்த இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடம் கையளிக்கப்பட்ட எழுத்துமூல அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் கிணறு, தாங்கி, தடாகம், நீர்ப் பாத்திரம், நீர்ப்பூ அல்லது பாத்திரத்தின் மேற்பரப்பின்மீது விதிக்கப்படும் பொருட்களை நிரப்பி அதனை மூடிவிடவோ அல்லது வேறேதும் வகையில் அழித்து விடவோ அல்லது குறித்த காலத்துக்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றியமைக்கவோ விதிக்க முடியும்.

07. (I) 05 ஆவது அல்லது 06 ஆவது துணை விதியின் கீழ் அறிவித்தலொன்றைக் குறித்த இடத்தின் உரிமையாளரிடம் அல்லது குடியிருப்பாளரிடம் நேரடியாகவோ அல்லது அந்த அறிவித்தலைக் குறித்த இடத்தில் நன்கு தெரியும் வண்ணம் ஒட்டவைத்தோ வழங்க முடியும்.

(II)ஏதேனும் ஒரு இடத்தில் கூட்டு உரிமையாளர் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் வசிக்குமிடம் தொடர்பில், குறித்த உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் 07(1) ஆவது துணை விதி மற்றும் 05 ஆவது துணைவிதியின் கீழ் அவர்களில் ஒருவரிடம் கையளிக்கப்படும் அறிவித்தலின் நியமங்களை வேண்டுமென்றே நிறைவேற்றாது விட்டுவிடுவாரெனில், அவர்கள் பொதுவாகவும் தனித்தனியாகவும் அதற்கு வகை சொல்லுதல் வேண்டும்.

(III) 05 ஆவது அல்லது 06 ஆவது துணை விதியின் கீழ் அறிவித்தல் கையளிக்கப்பட்ட ஓரிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், குறித்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அவற்றின் நியமங்களை நிறைவேற்றாது இருக்கும் சந்தர்ப்பங்களில், நகரசபைத் தலைவர் அல்லது அறிவித்தல் விடுக்க அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் அல்லது குறித்த கருமத்தை நிறைவேற்ற அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரால் எந்தவொரு நாளிலும் முற்பகல் 6.00 மணியிலிருந்து பிற்பகல் 6.00 மணிவரையுள்ள நேரத்தில் தேவையெனக் கருதும் உதவியாளருடனும் பணியாட்களுடனும் குறித்த இடத்துக்குள் நுழைந்து, அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள நியமங்களையோ அல்லது செயற்பாடுகளையோ நிறைவேற்ற அல்லது நிறைவேற்றச் செய்ய முடியும்.

(IV) ஏதேனும் ஒரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 05 ஆவது, 06 ஆவது மற்றும் 07 ஆவது துணை விதிகளின் கீழ் கையளிக்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதும் கருமங்கள் அல்லது செயற்பாடுகள் நகரசபைத் தலைவரால் அல்லது தலைவர் அதிகாரம் வழங்கிய அலுவலரால் அவை நிறைவேற்றப்பட முடியும். அவ்வாறு நிறைவேற்றப்படும் பட்சத்தில், குறித்த கருமங்களை அல்லது செயற்பாடுகளை நிறைவேற்ற மேற்கொண்ட செலவுகளைக் குறித்த இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நகரசபையிடம் செலுத்துதல் வேண்டும். நகரசபைத் தலைவர் தனது கையொப்பத்துடனான அறிவித்தலை விடுத்த 14 நாட்களுக்குள் குறித்த தொகைப் பணத்தை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செலுத்தத் தவறும் பட்சத்தில், அது நகர சபைக்குக் கிடைக்கவேண்டிய தண்டப்பணம் எனக் கருதி, அதனை உரிமையாளரிடமிருந்து அல்லது குடியிருப்பாளரிடமிருந்து அறவிட்டுக் கொள்வது சட்டபூர்வமானதாக அமையும்.

08. இந்தத் துணை விதிகளில் ஏதேனும் ஒன்றை மீறுவது குற்றச் செயலாகக் கருதப்படும். எவரேனும் ஒருவர் இதற்கென நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் எழுநூற்றி ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும். மீறும் செயல் தொடர்ந்தும் செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருநூற்றி ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

09. சொற்பிரயோகம் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில்

"உரிமையாளர்" என்பது ஏதும் உரிமையாளர் மற்றும் குத்தகையாளர் அல்லது ஏதும் இடமொன்றில் வாடகைக்கு இருப்பவர் அல்லது அறுவடையை எந்த வகையிலும் உரிமை பாராட்டுபவரையும்,

"குடியிருப்பாளர்" என்பது ஏதும் ஒரு இடத்தில் குடியிருப்பவர் அல்லது இன்னுமொருவருக்காகப் பிரதிநிதியாகச் செயற்படுபவர் அல்லது அதன் பொறுப்பையோ முகாமையையோ அல்லது நிர்வாகத்தையோ மேற்கொள்பவரையும்,

"அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பது நகரசபைத் தலைவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் அல்லது ஊழியரையும்,

"சபை" என்பது நகர சபையையும்,

"நகரசபைத் தலைவர்" என்பது உரிய நகரசபையின் தலைவரையும்,

"நோய் காவும் கிருமிகள்" என்பது நுளம்புகள் மற்றும் நோய்களைப் பரப்பும் ஏனைய கிருமிகளையும்,

"இடம்" என்பது ஒரு காணி, வீடு, கடை அல்லது நிர்மாணம் என்பதுடன், பயன்படுத்தப்படும் அல்லது கைவிடப்பட்ட கிணறு, கப்பல், கொள்கலன் அல்லது கைவிடப்பட்ட வாகனம் என்பவற்றையும், தடாகம், தாங்கி, குளத்துக்கான தண்ணீர் வழி, வடிகான் அல்லது ஆற்றங்கரை என்பவற்றையும் குறிக்கும்.

**பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பது தொடர்பான துணை விதிகள்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரால் தயாரிக்கப்பட்ட பின்வரும் வரைவுச் சட்டத் துணைவிதிகள் மேற்குறித்த பிரிவுகளின்கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*மேற்குறித்த வரைவுச்சட்ட துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கொண்டமைந்த துணைவிதிகளை வரைவு செய்ய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 126 ஆவது பிரிவின் மூலம் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ள பிரதேச சபைகளுக்கு 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய மேற்குறித்த 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின் 3 ஆவது உபபிரிவின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த சட்டமூலத்துக்கு இயைவாகத் துணைவிதிகள் தழுவப்பட இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண மாகாண சபை,*
*கண்டி,*
*2012.06.18.*

---

**பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பது தொடர்பான துணை விதிகள்**

*1. இந்தத் துணை விதிகள் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நுளம்புகளும், நோய் காவும் கிருமிகளும் பரவுவதைத் தடுப்பதன் மூலம் மற்றும் அழிப்பதன் மூலம் நிர்வாகப் பிரதேசத்தின் சுற்றாடல் நிலைமையை விருத்தி செய்வது மற்றும் தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதற்குமான துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. பிரதேச சபைப் பிரதேசத்துக்குள் எவரேனும் ஒருவர் எந்தவொரு வளவிலும் நுளம்புகள் அல்லது நோய் காவும் கிருமிகள் பெருகுவதற்கும் விருத்தியாவதற்கும் ஏதுவான வகையில் செயற்படுவது அல்லது செயற்படுத்துவது அல்லது அவ்வாறு நிகழ்வதற்கு இடமளிப்பது கூடாது.*

*3. நுளம்புகள் மற்றும் நோய் காவும் கிருமிகளை அழிப்பதற்காக பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள ஒவ்வொரு வளவினதும் குடியிருப்பாளர்கள்,*

I. *மூடப்படாத அனைத்து ரின்கள், போத்தல்கள், பெட்டிகள், பிளாத்திக் கொள்கலன்கள், டயர்கள், தென்னஞ் சிரட்டைகள், தென்னங் கோதுகள் மற்றும் அவ்விடத்திலுள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள், பாத்திரங்கள் போன்றவற்றை அகற்றச்செய்ய அல்லது அழித்துவிட ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

II. *குடியிருக்கும் அல்லது குடியிருக்காத கட்டடங்களின் மழைநீர்ப் பீலிகள், கூரைத் தண்ணீர் தரைக்கு வருவதற்காக உள்ள நீர்க்குழாய்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் அமைந்துள்ள வடிகான்களில் நீர் முறையாக வடிந்தோடக்கூடிய வகையில் அவற்றைப் பராமரித்து வருதல் வேண்டும். அவற்றில் ஏற்படும் தடைகள் நிதமும் பரிசீலிக்கப்பட்டு அகற்றப்படுதல் வேண்டும்.*

III. *குடியிருக்கும் அல்லது குடியிருக்காத வளவுகளுக்குள் காணப்படும் அனைத்து நீர்ப் பாத்திரங்கள், தாங்கிகள் மற்றும் நீர் தேங்கி நிற்கும் ஏனைய பாத்திரங்கள் என்பவற்றை நல்ல நிலையில், காலத்துக்கேற்ற வண்ணம் மறுசீரமைத்தும் பராமரித்தல் வேண்டும். அவற்றை நுளம்புகளிலிருந்தும், கிருமிகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் வண்ணம் மூடியோ அல்லது மறைத்தோ வைப்பதுடன் அவற்றில் நுளம்புகளும் கிருமிகளும் பரவுவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.*

IV. *வளவுக்குள் அமைந்துள்ள அனைத்துக் கிணறுகளையும் நல்ல நிலையில் வைத்திருப்பதுடன் நுளம்பு மற்றும் நோய் காவும் கிருமிகள் பெருகுவதைத் தடுக்கும் வகையிலும் வைத்திருக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.*

V. வெறுமையாக்க இயலுமான வகையில் அமைக்கப்பட்டுள்ள செயற்கைத் தடாகங்கள் இருப்பின், அவை குறைந்தது வாரத்தில் ஒரு தடவையேனும் வெறுமையாக்கப்பட்டுத் தூய்மையாக்கப்படுதல் வேண்டும்.

VI. வீட்டுத் தோட்டங்களிலும் காணிகளிலும் உள்ள வடிகான்களில் வடிந்தோடும் நீர் சேருவதனால் ஏற்படும் நீர்க் குழிகள் அமைவதைத் தவிர்க்கும் வகையில் அவற்றைக் கிரமமாகப் பராமரித்து வருதல் வேண்டும்.

VII. மனித வசிப்பிடமாகப் பயன்படுத்தப்படும் ஏதும் கட்டடங்கள் அல்லது நிர்மாணங்கள் அமைந்துள்ள 5 மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் உணவுக்காக அல்லது அழகுக்காக வளர்க்கப்படும் தாவரங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பற்றைக் காடுகளும், பயிர்ச்செய்கைகளும், தாவரங்களும் அப்பகுதியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

VIII. அனைத்து கற்குழிகளும், இரத்தினக்கல் அகழ்ந்த குழிகளும் அல்லது வேறேதும் காரணங்களுக்கென தோண்டப்பட்ட குழிகளும் நீர் சேருவதைத் தடுக்கும் வகையில் பேணப்படுதல் வேண்டும்.

IX. மேட்டுத் தரைகளில் வளரும் நீர் தேங்கி நிற்கக்கூடிய வண்ணத் தாவரங்கள், பாசி, எண்ணெய்ப் பாசி மற்றும் பாசி வகைகள் உள்ளிட்ட நீர்த் தாவரங்கள் மற்றும் நுளம்புகள், கிருமிகள் பெருகுவதற்கு இடமளிக்கும் எனக் காலத்துக்குக் காலம் தெரியவரும் ஏனைய தாவரம் அல்லது தாவரங்கள் என்பவற்றை அகற்றி அழித்து விடுதல் வேண்டும். குறித்த தாவரங்கள் ஏதும் நீர்ப் பாதைகளினூடே மிதந்து செல்வதைத் தடுக்கும் வண்ணம் பொருத்தமான தடைகளை அமைத்து, அவை பரவிச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

X. மலசலகூடங்கள், நீர்க்குழிகள், உறிஞ்செடுக்கும் குழிகள், முத்திரையிடப்பட்ட குழிகள் மற்றும் அவற்றின் சுற்றாடல் உள்ளிட்ட குறித்த இடத்திலுள்ள அனைத்து மலசலகூடங்களையும் நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கும் நிலையில் நடத்திச் செல்லுதல் வேண்டும்.

XI. மயானங்கள் அல்லது ஏனைய வளவுகளில் அமைக்கப்படும் இறந்தோருக்கான நினைவுச் சின்னங்கள் நீர் தேங்கி நிற்காத வகையில் நிர்மாணிக்கப்படுதல் வேண்டும்.

4. பிரதேசசபையின் தலைவர் அல்லது குறித்த கருமத்தை நிறைவேற்றவென எழுத்து மூலம் அனுமதி வழங்கப்பட்ட அலுவலர் எந்தவொரு நாளிலும் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணிவரையுள்ள காலத்துக்குள் எந்தவொரு இடத்திலும் உட்பிரவேசித்துப் பின்வரும் அம்சங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகக் குறித்த இடத்தைப் பரிசோதனை செய்வது சட்டபூர்வமானதாக அமையும்.

I. குறித்த இடம் நுளம்புகளும் கிருமிகளும் பரவும் இடமா என்பது;

II. குறித்த இடத்தின் குடியிருப்பாளர், துணை விதிகளில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிடித்துள்ளாரா என்பது;

III. குறித்த இடத்தில் நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதற்கும்,அழிப்பதற்குமென நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டி இருப்பின், அவை என்ன என்பது;

IV. குறித்த இடத்தில் கிருமிநாசினி விசிறும் கருமம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது.

05. (I) பிரதேசசபைத் தலைவரது அல்லது அவரது எழுத்துமூல அனுமதியுடன் கருமங்களுக்கென விசேடமாக அதிகாரம் வழங்கப்பட்ட எந்த அலுவலரும் குறித்த இடமொன்றைப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கருதி, மேற்கொண்ட பரிசோதனைகளின் பின்னர் குறித்த இடத்தில் நுளம்புகள் அல்லது நோய் காவும் கிருமிகளை அழிக்கவோ, கட்டுப்படுத்தவோ மேற்கொள்ளவேண்டிய கருமங்களைக் குறித்துரைக்கும் காலத்துக்குள் செய்து முடிக்க வேண்டுமென அந்த இடத்தின் உரிமையாளருக்கோ அல்லது குடியிருப்பாளருக்கோ எழுத்து மூலம் அறிவித்தல் விடுக்க முடியும்.

(II) இந்தத் துணை விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் அறிவித்தல் விடுக்கப்பட்ட ஏதும் ஒரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், குறித்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்துக்குள் அந்த நியமங்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

06.(I) தலைவரது எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு இடத்தினதும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அங்கு கிணறு தோண்டுவதோ அல்லது நீர்த்தாங்கி, தடாகம், நீர்ப் பாத்திரம், நீர்ப்பூ அல்லது நீரைத் தேக்கி வைக்கும் ஏதுமொரு தாங்கியை அமைக்கவோ கூடாது.

(II) இந்தத் துணை விதியின் (1) ஆவது பந்தியின் ஏற்பாடுகளை மீறும் வகையில் ஏதும் நிருமாணங்களைச் செய்யும் சந்தர்ப்பத்தில், பிரதேச சபைத் தலைவரால் குறித்த இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடம் கையளிக்கப்பட்ட எழுத்துமூல அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் கிணறு, தாங்கி, தடாகம், நீர்ப் பாத்திரம், நீர்ப்பூ அல்லது பாத்திரத்தின் மேற்பரப்பின்மீது விதிக்கப்படும் பொருட்களை நிரப்பி அதனை மூடிவிடவோ அல்லது வேறேதும் வகையில் அழித்து விடவோ அல்லது குறித்த காலத்துக்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றியமைக்கவோ விதிக்க முடியும்.

07. (I) 05 ஆவது அல்லது 06 ஆவது துணை விதியின் கீழ் அறிவித்தலொன்றைக் குறித்த இடத்தின் உரிமையாளரிடம் அல்லது குடியிருப்பாளரிடம் நேரடியாகவோ அல்லது அந்த அறிவித்தலைக் குறித்த இடத்தில் நன்கு தெரியும் வண்ணம் ஒட்டவைத்தோ வழங்க முடியும்.

(II) ஏதேனும் ஒரு இடத்தில் கூட்டு உரிமையாளர் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் வசிக்குமிடம் தொடர்பில், குறித்த உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் 07(1) ஆவது துணை விதி மற்றும் 05 ஆவது துணைவிதியின் கீழ் அவர்களில் ஒருவரிடம் கையளிக்கப்படும் அறிவித்தலின் நியமங்களை வேண்டுமென்றே நிறைவேற்றாது விட்டுவிடுவாரெனின், அவர்கள் பொதுவாகவும் தனித்தனியாகவும் அதற்கு வகை சொல்லுதல் வேண்டும்.

(III) 05 ஆவது அல்லது 06 ஆவது துணை விதியின் கீழ் அறிவித்தல் கையளிக்கப்பட்ட ஓரிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், குறித்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அவற்றின் நியமங்களை நிறைவேற்றாது இருக்கும் சந்தர்ப்பங்களில், பிரதேச சபைத் தலைவர் அல்லது அறிவித்தல் விடுக்க அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் அல்லது குறித்த கருமத்தை நிறைவேற்ற அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரால் எந்தவொரு நாளிலும் முற்பகல் 6.00 மணியிலிருந்து பிற்பகல் 6.00 மணிவரையுள்ள நேரத்தில் தேவையெனக் கருதும் உதவியாளருடனும் பணியாட்களுடனும் குறித்த இடத்துக்குள் நுழைந்து, அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள நியமங்களையோ அல்லது செயற்பாடுகளையோ நிறைவேற்ற அல்லது நிறைவேற்றச் செய்ய முடியும்.

(IV) ஏதேனும் ஒரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிப்பாளர் 05 ஆவது, 06 ஆவது மற்றும் 07 ஆவது துணை விதிகளின் கீழ் கையளிக்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதும் கருமங்கள் அல்லது செயற்பாடுகள் பிரதேச சபைத் தலைவரால் அல்லது தலைவர் அதிகாரம் வழங்கிய அலுவலரால் அவை நிறைவேற்றப்பட முடியும். அவ்வாறு நிறைவேற்றப்படும் பட்சத்தில், குறித்த கருமங்களை அல்லது செயற்பாடுகளை நிறைவேற்ற மேற்கொண்ட செலவுகளைக் குறித்த இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபையிடம் செலுத்துதல் வேண்டும். மாநகரசபைத் தலைவர் தனது கையொப்பத்துடனான அறிவித்தலை விடுத்த 14 நாட்களுக்குள் குறித்த தொகைப் பணத்தை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செலுத்தத் தவறும் பட்சத்தில், அது பிரதேச சபைக்குக் கிடைக்கவேண்டிய தண்டப்பணம் எனக் கருதி, அதனை உரிமையாளரிடமிருந்து அல்லது குடியிருப்பாளரிடமிருந்து அறவிட்டுக் கொள்வது சட்டபூர்வமானதாக அமையும்.

08. இந்தத் துணை விதிகளில் ஏதேனும் ஒன்றை மீறுவது குற்றச் செயலாகக் கருதப்படும். எவரேனும் ஒருவர் இதற்கென நீதிமன் றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் எழுநூற்றி ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும். மீறும் செயல் தொடர்ந்தும் செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருநூற்றி ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

09. சொற்பிரயோகம் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில்

"உரிமையாளர்" என்பது ஏதும் உரிமையாளர் மற்றும் குத்தகையாளர் அல்லது ஏதும் இடமொன்றில் வாடகைக்கு இருப்பவர் அல்லது அறுவடையை எந்த வகையிலும் உரிமை பாராட்டுபவரையும்,

"குடியிருப்பாளர்" என்பது ஏதும் ஒரு இடத்தில் குடியிருப்பவர் அல்லது இன்னுமொருவருக்காகப் பிரதிநிதியாகச் செயற்படுபவர் அல்லது அதன் பொறுப்பையோ முகாமையையோ அல்லது நிர்வாகத்தையோ மேற்கொள்பவரையும்,

"அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பது பிரதேச சபைத் தலைவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் அல்லது ஊழியரையும்,

"சபை" என்பது பிரதேச சபையையும்,

"பிரதேச சபைத் தலைவர்" என்பது பிரதேச சபையின் தலைவரையும்,

"நோய் காவும் கிருமிகள்" என்பது நுளம்புகள் மற்றும் நோய்களைப் பரப்பும் ஏனைய கிருமிகளையும்,

"இடம்" என்பது ஒரு காணி, வீடு, கடை அல்லது நிர்மாணம் என்பதுடன், பயன்படுத்தப்படும் அல்லது கைவிடப்பட்ட கிணறு, கப்பல், கொள்கலன் அல்லது கைவிடப்பட்ட வாகனம் என்பவற்றையும், தடாகம், தாங்கி, குளத்துக்கான தண்ணீர் வழி, வடிகான் அல்லது ஆற்றங்கரை என்பவற்றையும் குறிக்கும்.

9-613/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.